

முதற் பரிசு ஓரங்க நாடகம்

# மகுடி

**பூவை எஸ். ஆறுமுகம்**

நாடகத்தின் தலையாய உறுப்பினர்கள்

செங்கோடன்
முனியன்
மாடன்
ராசாத்தி

களம் : ஒன்று

[எருக்கலக் கோட்டையின் கிழக் கோடியில் அமைந்திருக்கின்ற பொட்டல் பெருவெளி. அதைச் சுற்றிலும் அங்கங்கே நடுவெளி அமைத்து நின்ற புளிய மரங்களின் நிழலில், சின்னஞ்சிறு பனை ஓலைக் குடிசைகள் சில இருக்கின்றன. அபாயத்தின் அவசரத்தை அறிவிக்கும் சங்கு ஊளையிடுகிறது. அங்கங்கே இருந்த குடில்களினின்றும் வெளியே வந்த குறவர்கள்,

**உலகளாவிய பொதுக் கள உரிமம் ( CC0 1.0 )**

இது சட்ட ஏற்புடைய உரிமத்தின் சுருக்கம் மட்டுமே. முழு உரையை https://creativecommons.org/publicdomain/zero/1.0/legalcode என்ற முகவரியில் காணலாம்.

**பதிப்புரிமை அற்றது**

இந்த ஆக்கத்துடன் தொடர்புடையவர்கள், உலகளாவிய பொதுப் பயன்பாட்டுக்கு என பதிப்புரிமைச் சட்டத்துக்கு உட்பட்டு, தங்கள் அனைத்துப் பதிப்புரிமைகளையும் விடுவித்துள்ளனர்.

நீங்கள் இவ்வாக்கத்தைப் படியெடுக்கலாம்; மேம்படுத்தலாம்; பகிரலாம்; வேறு கலை வடிவமாக மாற்றலாம்; வணிகப் பயன்களும் அடையலாம். இவற்றுக்கு நீங்கள் ஒப்புதல் ஏதும் கோரத் தேவையில்லை.

***

இது, உலகத் தமிழ் விக்கியூடகச் சமூகமும் ( https://ta.wikisource.org ), தமிழ் இணையக் கல்விக் கழகமும் ( http://tamilvu.org ) இணைந்த கூட்டுமுயற்சியில், பதிவேற்றிய நூல்களில் ஒன்று. இக்கூட்டுமுயற்சியைப் பற்றி, https://ta.wikisource.org/s/4kx என்ற முகவரியில் விரிவாகக் காணலாம்.

**Universal (CC0 1.0) Public Domain Dedication**

This is a human-readable summary of the legal code found at https://creativecommons.org/publicdomain/zero/1.0/legalcode

**No Copyright**

The person who associated a work with this deed has **dedicated** the work to the public domain by waiving all of his or her rights to the work worldwide under copyright law, including all related and neighboring rights, to the extent allowed by law.

You can copy, modify, distribute and perform the work, even for commercial purposes, all without asking permission.

***

This book is uploaded as part of the collaboration between Global Tamil Wikimedia Community ( https://ta.wikisource.org ) and Tamil Virtual Academy ( http://tamilvu.org ). More details about this collaboration can be found at https://ta.wikisource.org/s/4kx.

மையத்தில் காணப்பட்ட 'வழக் குத்திட்டி'யைச் சுற்றி ஒன்றுகக் குழுமுகிறார்கள். அந்த 'வழக்குத் திட்டின்' மீது தள்ளாடித் தளர்ந்து ஏறுகிறான், முனியன். அடி சாயும் பொழுது].

முனியன் :— இருவது குடிசைக்கார ங்க நீங்க அம்மாம்பேரும் நானு செப் றதைக் கருத்துக் கொலேயாம கேட்டுக் ங்கோ !...அறுவத்தெட்டு தொலேக் கல் லத் தாண்டிப்புட்ட கெழடு நானு. ரடி, கத்தாளே நாருக்கு மிஞ்சி வெளுத் ருப்பிட்டாலும், தடங்கெடாம இருந்து ங்களுக்கெல்லாம் இம்மாங்கொத்த வேளைக்கும் பொளுதுக்கும் பஞ்சாயம் ண்ணிக்கிட்டு வந்திருக்கிற இந்த முனிய னுக்கு, நம்ப சாதிக்காரங்க நீங்கதான் ஒரு ரோசனே எடுத்துக் குடுக்கவேணும். இப்பைக்கே வெசயம் தீரோணும் ! சட்டி சுட்டுச்சு ; அதை வுட்டுப்புட் டேன்னு' அந்தச் சாவாடு செத்த பய புடரியை விலாப்புடியாப் புடிச்சுக்கினு அலறி அலமாறச் செய்யோணும். அப் பத்தான் எனக்கு நெஞ்சாறும் !..ஒங்க ஞாயத்தைக் கேள்கிறத்துக்காவத்தான் ராமேசரம் சங்கை எடுத்து மூணுவாட்டி ஊத்துப் பறிச்சேன் !..

(கிழவன் முனியனின் கண்களில் அயர்வு மேலோடுகிறது. குறக் குடிகளிடையே சலசலப்பு மேலிடு கிறது.)

காளியப்பன் :— ஓம் பல்லுப் போனு லும் ஒனக்குச் சொல்லுப் போகலியே, பிந்தி ஏதுக்கு தாத்தா இப்பிடி செகல் தப்பி மயங்கிறே ?.. மீசையை வசமா ஒதுக்கி வுட்டுக்கிட்டு சேதியை விளுக் காட்டு, தாத்தா !... இப்பவே நாங்க ஒரு கூட்டாச் சேந்து உஞ் சங்கடத்தை எட்டுக் காதத்து வெளிக்கு எட்டி யோடச் செய்யிறோம் !..

(முண்டாவில் கைவிரல்களைப் பதித்து 'வஸ்தாத் பார்வை'யைச் சுழற்றியபடி நிற்கிறான் அவன்.)

முனி :— ஆளுகளா !... ஊருக் காட் டிலே நம்ம கொறப்படைங்களுக்குள் ளாற தப்புத் தண்டாச் செஞ்சாச்சின் னுக்க, அல்லாரும் ஒண்ணடி மண்ணடி யாக் கூட்டம் நாட்டம் போடுவம் ; பேசுவம் ; அப்பாலே நம்ப சாமி வாழுனியை உடுக்கடிச்சு அளேச்சு நிமித் தம் கேட்போம் ; கதையும் காரியமும் லபக்கினு முடிஞ்சுப்பூடும் !.. ஆனுக்க, இப்ப நம்ப குடியிருப்பானுங்களோட மல்லுக்கு அசலூரான் வலிய வந்திருக் கான் !.. ஊருக்கு ஒசந்த தலேயாட்டம் பத்து பொட்டைப் பண்ணி வச்சிருந் தாக்க, அதுக்காவ அவன் வூட்டு அக ராதியும் அம்பலமும் கணக்க விடுதிக்கு எல்கை மட்டுந்தான் செல்லும் ?... இல் லீங்களாப்பா ?...

சடையன் :— ஓம் பேச்சு ருசுக் கொண்ட மந்தரம் போலத்தான் இருக்கு, தாத்தா !.. மூடி மறைச் சுப் பேசாதே ! இந்தக் கொட்டாந் தரையிலே ஒண்ணரைக் காசை வீசினு, எம்மாங் கணக்காத் தெறிச்சு விளு கும், அதுக்கு ஒப்ப நீ வெட்ட வெளிச் சம் வச்சுப் பேசிப் பூடு, தாத்தா ! நீ நெஞ்சைத் தொறந்து நடப்பு இன்னதின்னு எனங் காட்டினுத் தானே எங்களுக்கும் வசம் புரியும் ?... பத்து ஊருத் தண்ணியைப் பதரும‌க்குடிச்ச ஆம்பளே நீ ; பதினெட்டு ஊரு மண்ணே மிதிச்சிருக்குறே !... தொண்ணூறு காட் டுக்குள்ள ஓடியாடி மகுடி ஊதி வகை வகையாப் பாம்பு புடிச்சி ஆஞ்சு ஓஞ்ச ஒங் கை ஏதுக்கு அய்யா இப்பிடி வெட வெடக்குது...?

(தொண்டு கிழமான முனியன் தன் னுடைய கண்களைத் தோள் துண் டுக் கிழிசலினுல் துடைத்துக் கொள்ளுகின்றான்.)

முனி :—ஒங்க அல்லாரு கிட்டத்தான் ஒருமுட்டாச் சொல்லுறேன். இப்ப எங்கையி, பயத்தாலே நடுங்கல்லே !.. ஆத்திரத்துலே துடிக்குதாங்காட்டி !... எம்மவ ராசாத்தியை எம் மாங்குடி மச்சான் மாடனுக்குக் கட்டிக் குடுக்க ணும்னு ராப் பகலா ரோசனே செஞ்சு வச்சிப்பூட்டிருந்தேனு ?... சமஞ்ச பொண்ணு, குடிசையிலே குந்தி விளுந்து கெடந்து, நாலு ரெண்டு பொளுதுக் காச்சும் சுடு கஞ்சி குடிச்சு ஒடம்பை கட்டிக் காக்கட்டுமின்னு தெனச்சு, நானு எம்பாட்டிலே வெயிலிலேயும் மழையிலேயும் ஓடியாடித் திரிஞ்சு, நாலு காசு சேத்துக்கிட்டிருக்கேன். தானு பணங்கொளம் வெள்ளிச் சந்தைக் காலே பறிஞ்சு இப்பத் திரும்பினடியும், குடிசையிலே பாஞ்சாலியை கண்ணுப் பொறத்தாலே காண ஏலலே !..ஒத்தத் தடம் தேத் தண்ணிக் கடைச் சேர்வை கார மொதலாளிகிட்ட நாடி, சாரிச்சா, அவுரு எந்தலே மேலே செம்புறாங் கல்லைத் தூக்கி வீசிப் பூட்டாரு!...உச்சி தொட்டு கணக்கவிடுதியான் செங்கோடன் வந்து இங்கிட்டாலே கோலியாந்து, ரோந்து சுத்திக்கினுருந்தானும் !... அந்தப் பட வாப்பயமவந்தான் எம் பொண்ணுக்

குட்டியை கூட்டிக்கிட்டுப் பறந்திருக்கோணுமிங்கிறதுதான் எம் முடிவாக்கும்!...

(பெருமூச்செறிகிருன் முனியன்.)

வீரன் :— நம்ம சாதிப் பொறப்பிலவே இல்லாத கூத்தா இருக்குதே?... ராசாத்தித் தங்கச்சியை மனசுக்குப் புடிச்சிருந்தா, நம்ம குடியிருப்பாலே அந்த செங்கோடன் ஒரு மூச்சு வந்து, சாதி வளமைப்படி சம்மந்தஞ்சாடிக் கைக்கு பாக்கு வெத்திலே வச்சு அழேச்சு, நாலுரூவா காசு எடுத்து, வாமுனி சாமிக்கு மஞ்சத் துணியிலே முடிஞ்சு போட்டு, கோணுங்கி பாத்து, நல்லது கெடச்சா, பொண்ணெ முடிவு செய்யறது!

(முனியன் சிணுங்கல் இருமலை வெளியிட்ட வண்ணம் மீண்டும் இடைமறிக்கிருன்; நரை முடி பறக்கிறது.)

முனி :— மொறையும் வளமையும் தூரக் கெடக்கட்டும் மச்சான்!.. எம் மவ ராசாத்திக்குத்தான் நானு மாப்புள்ள தேடி வச்சிக்கிணு, அவகளுக்கு வாக்கும் சொல்லிப்பூட்டேனே?... நேரங் கெட்டு செங்கோடன் வந்து பூதிப்படியா இப்படிச் செஞ்சிருக்கிருனே?...தடங்கெட்ட பிணுதியிண்ணுதானே என்னே நிறுத்துப்புட்டிருக்கிருன் அந்தப் பயல்?

வீரன்:—கிலேசங்காட்டாதேயுங்க!.. கையோடவே ஓடி, செட்டியாரு கடையிலே சைக்கோலு வண்டியை வாடகைக்கு எடுத்துக்கிட்டுப் பறியிறேன், மாமு!..எச்சீமைக்குப் போயிருந்தாலும், செங்கோடனெ கையும் மெய்யுமாப் புடிச்சுக்கிட்டு ஓங்க காலடியிலே போட்டுப் பூடுறேன்!.. மேலுக்கு முடியாத காலத்திலே, நீங்க ஓலேப் பாயிலே பூந்து மொடங்கிக்கிடுங்க!

முனி:—ஓம்புள்ளே குட்டி எளுதிக் கெடக்கும்!..தாமசம் பண்ணும ஓடு. எம்மவ ராசாத்தி ஒலகம் படிக்காத சின்னது. அதைக் கையிலே இட்டுக்கிட்டு வந்து ஏங்குச்சிலெ வுட்டுப்பூடு, வீரா!... தப்புகிப்பு எதுஞச்சும் நடந்திராம இருக்கிறதுக்கு நம்ம வாமுனிதான் கண்ணெ முளிக்கோணும்! வா வெரசா!.. தேத்தண்ணிக்கும் பீடிக்கும் வீச ரூவா, அரைக்கா ரூவா முடிச்சிலேருந்து அவுத்துத் தாரேன்!... காலே எட்டிப்போடு, மச்சான்!

('வழக்குத் திட்டு' களே பறிபோய்க் காணப்படுகிறது.)

## களம் : இரண்டு

(வாமுனி கோயில் காட்டுப் பகுதி. 'பஞ்சாயம்' முதலிய உயிர்ப்புக் கொண்ட சந்தர்ப்பங்களிலேதான் கோயிற் சந்நிதியில் அடிமைக்காரக் குறவர்கள் கூடுவது வழக்கம். நட்டுவைத்த இரட்டைச் செங்கல்களுக்கு இடையில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த இரும்பு வேல்தான் குறவர்களின் குலதெய்வம். இருபது குடிசைவாசிகளான ஆண்கள் ஒன்ருக ஓர் ஓரத்தில் நின்று கொண்டிருக்கிருர்கள். எதிர்ப் பகுதியில், கணக்கன் விடுதி செங்கோடன் நிற்கிருன். ஆத்திரம் பாதியும் அவமானம் பாதியுமாகக் காணப்படுகிருன். கிழவன் முனியன் மீசையைத் தடவி விட்டுக் கொண்டு கோபக்கனல் தெறிக்கக் காரைச் செடியைச் சுற்றி நடந்து கொண்டிருக்கிருன். 'சீதக்கதிர்மதி' விண்ணில் விளேயாட்டுக் காட்டிக் கொண்டிருக்கிறது.

முனி ;— ஒறமொறை, சாதிசனங்களா! ஆரம்பியுங்க! பொளுது பாயுது! அப்பாலே, வாமுனுசாமி வெள்ளோட்டத்தை முடிச்சுக்கிட்டு மலேயேறுறதுக்கு அந்தக் காட்டுக்குள்ள பொசுக்கிணு புகுந்துப்பூடும்! வெள்ளென வெளெக்கனத் தொடங்குங்க!..... ஏடே, லெச்சுமா!.. மூஞ்சியை மறைக்காதிலே! வீரன் பேசட்டுமுடா!..

(வீரன் 'தலே முண்டாசை'ச் சீர் செய்து 'சக்தி வேலே' விழுந்து வணங்கி, சாம்பிராணித் தூபமிடப்பட்டிருந்த ஓட்டின் நுனியில் ஒட்டியிருந்த சாம்பலே எடுத்து நெற்றியில் இட்டுக் கொண்ட பின், செங்கோடனெ அண்டுகிருன். 'கை முண்டா'வில் கட்டப்பட்டிருந்த 'வெள்ளித் தாயத்து' பளபளக்கிறது.)

வீரன் :— கணக்க விடுதி பொடிசு!.. நாங்க சுத்தி வளச்சு இருவது குடிசைக்காரவுக இருந்துகிணு இருக்கறப்ப, எங்க அம்பிட்டு தடிமுண்டங்க கண்ணுலவும் பொடி மண்ணெத் தூவிப் போட்டுப் புட்டு, கொமரிப் பொண்ணெக் கடத்திக் கிட்டுப் போவப் பாத்தியே, இது லேசுப் பட்ட நடப்பா இது?.. சொந்தஞ் சோவாரி அத்துப் பூன ஆளு நீ. ஆளு பசை இருக்கு. அதுக்காவ, எங்க

ராசாத்தியை பொத்தினுப்புலே கொத்திக்கினு ஓடிப்பூட ஏலுச்சா?.. பன்னிக்குட்டி பாலு குடிக்கிறதுக்குள்ளாற, சைக்கோலிலே நான் பறந்தாந்தேன். எங்க ஆளுங்களும் ஓடியாந்தாங்க. லாவு எட்டிப் பாத்திச்சு!... நானு என்னைக் கண்டு புடிச்சிக்கினேனுக்கும்!.. சரிங்கிறேன்!.. இப்ப நீ என்ன சொல்லி ஏதுகாட்டி ஒங் குத்தத்தை ஒளிச்சுப்புட முடியும்?... ஊம், ஓதட்டைத் தொறவேம்பா!...

(செங்கோடனின் களை தப்பிய முகம் சோர்வு கொண்டு இலங்குகிறது. முறுக்கு மீசையில் சத்து இல்லை; வாளிப்பான உடம்பில் அவமானம் உறவாடுகிறது! காசுமணி மாலை ஒன்று கழுத்தில் நிழலாடுகிறது. இதழ்க்கரையில் பிளவு.)

செங் :— பேச்சு நெட்டுக்கு ஒட்டப்புடாது!... அதை அந்த வாகிலே நிப்பாட்டிக்கோணும்!..அந்தப் பொண்ணு ராசாத்தி சொன்ன சொல்லுக்குத்தான் நானு ஒங்க கூட சும்மா வந்தேன்! திரும்பு காலிலே ஒங்க ஆளுக நைத்தியம் பேசிச் சாடை கீடை சொன்னதுக்குக் கூட, வாயைக் கட்டிக்கினு மூச்சுக்காட்டாமே வந்ததுக்குக் கூட ராசாத்தி பேச்சை மதிச்சுத்தான்!

(முனியனின் வெஞ்சினம் சீறுகிறது.)

முனி :— இல்லேன்னு, மண்ணை கயிருத்திரிச்சிருவீயாடா?.. கத்தாளை நாரை திரிச்சிக் கயிருக்கி காசு பண்ணுறதெல்லாம் சந்தைக் கெடுவுக்கு வச்சுக்கிடு! இங்கனே அது செல்லாது?... சொல்லடா ... கொம்பேறி மூக்கன் சாடையா வந்து எம்மவளை ஏண்டா கூட்டிக்கிட்டு ஓடினே?.. பாம்போடு பாம்பா எம்பொட்டிக்குள்ள போட்டு ராசாத்தியை மூடிக்கிட்டு காப்பாத்திக்கிட்டிருக்கது ஒனக்குப் பொறுக்கலையாடா? போன கடுத்தம் காளையாரு கோயிலு ரதத்துக்கு நீ என்னை கொளை அடிச்சு, சம்பந்தம் பூட்டுக்கிட ரோசிச்சுக்கிட்டிருக்கிறதைப் பத்திச்சொன்னே. நானு அப்பவே விசயத்தைப் புட்டு வச்சுப்பூட்டேன்! மறுகா, நீ ராசாத்தியை மூஞ்சி திரும்பிப் பாத்திருக்கே. இத்துக்கு எம்மாந் திமிரு இருந்திருக்கோணும் ஒம்மூஞ்சிக்கு?.. தில்லிக்குப் பூனைக்கூட, ஒஞ்சேக்கை அலக்கா தூக்கிப் புடிச்சு இங்கனே இளுத்தாந்து வீசிப்புடுவான் இந்த முனியன்!...இதை முடிஞ்சுக்க!... ஊம்!... பொளுது நேரம் காணலே!.. சல்தி பண்ணு! நீ சேஞ்ச குத்தத்துக்கு ஒம்மடிப்பணம் அவதாரம் கீளே கொட்டியாகணும்; ரெண்டு கைவீச்சுப் பணம் ரூவா பத்து நீட்டுடா!...

(செங்கோடன் 'கார்க்கோடன்' பாம்பு போன்று உருட்டிப் பயங்காட்டி விழித்துச் சிரிப்பினைக் கக்குகிறான். மீசைமீது கை விரல்கள் ஊர்கின்றன.)

செங் :— அய்யோவ்!... எங்கிட்டாலே வந்து, அவராதம் வாங்கிறதின்னு, அதுக்கு நீங்க ஒட்டுக்க மறு பொறப்புத்தான் எடுக்கோணும்!... ஆமாஞ்சொல்லிப்பூட்டேன்!



கிறான். மிஞ்சியிருந்த பற்கள் கூடிப் பிரிகின்றன.)

வீரன் :— நம்ம சாதிக் கட்டுத் திட்டத்தை ஒடைச் செறிஞ்ச ஓம்பாவத்துக்கு மாப்பு விடவே ஏலாது, செங்கோடா !

முனி : — ஆமா, இன்னொரு வாட்டி, வேப்பெலை வீசி நெனப்பூட்டிக்கிடு, மச்சாவி !. . எந் தலைச்சம் பொண்ணை நீ கைபுடிச்சுக் கூட்டிக்கிணு போவ மொனஞ்சது, வாமுனிக்கே அடுக்கமாட்டாது ! . . . . . அவராதம் கட்டலேன்னா, இங்கனவே ஒந்தலை இந்த வாமுனிச் சாமிக்குக் காவு போயிடும் !...

(செங்கோடன் வெறி கொண்டு சிரிக்கிறான்.)

செங்கோடன் :—அதுக்கு நீங்க பெருங்கார முண்டார்சாமிக்குக் காவடி எடுத்தாத்தான் ஏலும் ! . .

(வீரன் தலையிடுகின்றான்.)

வீரன் :— இந்தாப்பா, செங்கோடா! நீ அசலூர்க்காரன் ! ஆனாலும், நம்ம எனம் ! . . எதம் பதமாச் சொல்லு !... நீ ஏதுக்கு எங்க ராசாத்தியைக் கடத்திக்கிணு போவ எத்தினிச்சியாம் ? இதுக்கு நீ சவாப்புச் சொல்லலேன்னா, அப்பொறம் நடக்கிறதுதான் என்னவாம் . .?

(செங்கோடன் கருவத்துடன் கனைத்துக் கொள்கிறான்.)

செங் :— அப்பிடி வாங்க வழிக்கு !... நான் ஏதுக்கு ராசாத்தியைக் கூட்டிக் பொண்ணு வாயாலாயே அறிஞ்சுக்கிடுங்க !. .

(முனியன் தவிக்கிறான். அச்சம் ஏறு முகம் காட்டுகிறது.)

முனி :— டே காளியப்பா !. . இந்த ஆளு செங்கோடனைக் கைப்புடியாக் கொண்டுக்கிட்டு நட ? குடிசைக்கு !. . ராசாத்தியை நியாயம் விசாரிப்போம் !

(செங்கோடனின் வலுப்பெற்ற கைகளை பற்றிப் பிடிக்க காளியப்பன் முனைகிறான். செங்கோடன் திமிறிக் கொள்கிறான்.)

செங் :— டோய் !... வுட்டுப்பூட்டு நகளுடா !... நான் ஒண்ணும் களவாணிப் பய இல்லீடா !. . கையைத் தொட்டே, அப்பாலே எங்கைக் குத்துக்கு நீ காண மாட்டே !. . ஊம் போடா !...

(செங்கோடனைச் சுற்றி வளைத்துக் கொண்டு அனைவரும் குடிசைகளை நோக்கி நடை பயில்கிறார்கள்.)

களம் : மூன்று

(இரண்டு பாகம் தளத்திற்குப் பின்னிய ஈச்சம்பாயை அப்படியே சுருட்டிக் குடிசையின் சனி மூலையில் சாய்த்து வைத்துவிட்டு, பாம்புப் பெட்டிகளைச் சீர்பண்ணிக் கொண்டிருக்கிறாள் ராசாத்தி. அப்போது எள்ளும் கொள்ளும் முகத்தில் வெடிக்க முனியன், கைக்கழியுடன் வீசி வீசி நடந்து தலையைக் குனிந்தபடி குடிசையின் உள்ளே பிரவேசிக்கிறான். புறத்தே வண்ண



நிலா வனப்புக் கொண்டு [illegible] தாங்கிப் பவனி வந்து கொண்டிருக்கின்றது.)

முனி:—ஏல ராசாத்தி! என்னை உசிரோடவே வச்சுப் பொசுக்கிப்பூட ரோசிச்சுப் பூட்டியாங் காட்டியும்...? இல்ல, ஒரு வாய்ப் பேச்சுக்குக் கேட்டு வைக்கிறேன்.

(ராசாத்தி துடிக்கிருள்.)

ராசாத்தி:—சாரைப் பாம்பாட்டம் ஏம்பா இம்மாஞ்சத்தமும் சலசலப்பும் காட்டுறே?... ஒம் பொண்ணு வளி தப்பி நடக்கமாட்டா; என்னை நம்பு!...ஆமா, சங்கதி என்னு நடந்திச்சு? வெளிக்காட்டப்புடாதா?

(முனியன் மேனியில் நடுக்கம் கிளர்ந்தெழுகிறது.)

முனி:—கணக்க விடுதியான் செங்கோடனோட நீ ஏனும் சொல்லாமக் கொள்ளாம குச்சுதாண்டிப் போனே?.. வாமுனி சாமிக்கு முன்னாடி செங்கோடனைப் புடிச்சிக்கினு போயி கேட்டாக்கா, அவன் அடம்புடிச்சி, அளும்பு பேசி, தட்டுமானம் காட்டி, அருட்டி உருட்டி முடிஞ்சி, கடோசிலே ஒன்னைக் கையைக் காட்டிப்பூட்டானேம்மா? ராசாத்தி, நீ பச்சயாச் சொல்லிப்பூடு!.. இதிலே என்னமோ ஏதோ சூது குந்திக்கினு இருக்குது!..சொல்லு, என்னு சங்கதி? இல்லேன்னு, இப்பவே நானு புதுசாப் பிடிச்சாந்து பல்லுப்புடுங்காம கெடக்கிற கட்டு விரியன் வாயிலே கையைக் குடுத்து நான் செத்துச் செவலோவம் பூடுறேன்..

(கிழவனின் நா தழு தழுக்கிறது. ராசாத்தியின் 'கன்னிமனம்' கலங்குகிறது.)

ராசாத்தி:— ஆயியைப் பறிகுடுத்த நானு அப்பனையும் வுட்டுப் போக்க ஒப்ப மாட்டேன்! நடந்ததைச் சொல்லிப் புடுறேன்!.. எம்பிட்டு உசிரை அந்த மச்சாந்தான் ஒருநா காப்பாத்திச்சி? அதொட்டி, என்னையே அது கையிலே ஒப்படைச்சுப் புடுறதாவ கையடிச்சுக் குடுத்துப்பூட்டேன்!.. கண்ணாலத்துக்கு முன் சீரா அது என்னிட்டே அளகான மகுடியைத் தந்திச்சு. பரிசத்துக்கு அச்சாரமா பாக்கு வெத்திலை நீட்டிச்சு. பனங்கொளம் வெள்ளிச் சந்தைக்கு கூட்டிப் போயி சுங்கடிச் சீலையும் கொட்டடி ரவிக்கையும் வாங்கித் தந்திச்சு. ஒன்னை நாலு வாட்டி வளி மறிச்சோம்; கணக்காகத் தப்பிச்சிக்கிறோம்!... அண்டப் [illegible] திலே குத்தம் இருக்கா? சொல்லுப்பா!

(கிழவன் முனியனின் கண்கள் கலங்குகின்றன.)

முனி:— பெத்தவங்கிட்டக்கூட மறச்சுப்பூட்டு உத்தவனைத் தன்னடைச்ச மூப்பாத் தேடிக்கிடுறத்துக்கு ஒனக்கு வயசு பத்தியிருச்சா, ராசாத்தி?.. ஊரு நாட்டிலெ நல்லது கெட்டது நடக்கையிலே விருந்து எச்சி எலையைப் பொறுக்கக்கூட ஒன்னை அனுப்பலே, கூடை குண்டான் முடைஞ்சுக்கினு, ஒஞ்ச நேரத்திலே பாயைப் பின்னிக்கினு குந்தியிருக்க வச்சு, ஒன்னைக் கட்டிக்காத்துக் கிட்டிருந்தேனே, அதுக்கு செமந்த பாடத்தைக் கத்துக்குடுத்திப் பூட்டிருக்கியே நீ?..ஊம்!... ஒன்னை நம்பியிருந்து, நானு நம்ப மாங்குடி மாடனுக்கு ஒன்னைப் புடிச்சுத் தந்துப்பிடுறேன்னு வாக்குக் குடுத்திருக்கேனே, அதுக்கு எனக்கு என்னு நீ பாதை கட்டப் போறே?.. அந்த இளவட்டம் பரிசத்துக்கு முன்னோட்டமாத் தந்து வச்சிருக்குற மகுடியை இப்ப நீ என்னு பண்ணச் சொல்லுறே?..

ராசாத்தி:— ஏ அப்போவ்!... ஏதுக்கு இப்பிடி ஆட்டவரங்கட்டிக் குடிசையை திரு நட்டப்படுத்திறே?.. அந்த மாங்குடி ஆம்பளையைக் காட்டியும் எம்மனசுக்கு இதான் இயிட்டமா யிருந்திச்சு!.. கணக்க விடுதி மச்சான் எங்கழுத்திலே மஞ்சக் கயித்தை முடி போட்டானதும், ஓங்கிட்ட சேதியைக் காதிலே போட்டுக் கிடலாம்னு ரோசிச்சேன். ஆனா நீ இப்பிடியாக் கொந்த சத்தம் காட்டி, ஒற முறையைக் கூட்டி வச்சு, அந்த மச்சானையும் சந்திக்கு இளுத்து நைத்தியம் பண்ணுவேன்னு நானு சொர்ப்பனத்திலே கூட ரோசிக்கல்லே!..

(படமெடுத்த நல்ல பாம்பெனச் சீறுகிருன் முனியன்.)

முனி:—அப்பன்னு, நீ தடங்கண்ட பாதைதான் கணக்கின்னு பேசிறியா, ராசாத்தி?...ஒந்தடங்கெட்ட அப்பன் பேச்சும் தடந்தப்பியிருக்குதின்னு கோடி காட்டிறீயா?...

ராசாத்தி:— ஏம்ப்பா இம்மாம் பெரிசா என்னைச் சோதிக்கிறே?

(தேம்பல் ஒலி புறப்படுகிறது.)

முனி:—நீயில்ல என்னைச் சோதிச்சுப் புட்டு குந்திக்கினிருக்கே? நேத்து வந்தவன் ஒனக்கு ஒசந்த தலையாப்பூட்டானில்ல...? மாங்குடியான் அந்தச்

செங்கோடனுக்கு மேலே கை ஓங்கினவன் ; நெனப்புலே எழுதிக்கிடு! இருவது பன்னி மேச்சலுக்கு இருக்கு ; தெனைக்கும் ஒண்ணு அரை அரிசிக் குறுனை நொய்க்கு சம்பாரிப்பான். ஆமா !...

ராசாத்தி :— அல்லாஞ் சரி !

முனி :— பொறவு...?

ராசாத்தி :— கணக்க விடுதி மச்சான் எனக்கு உசிரைக் குடுத்த சாமியாவே எனக்குத் தோணுதே ?

முனி :— நல்லாச் சொக்குப்பொடி தூவி ஒன்னை வலையிலெ பூட்டு மூடிக்கிட்டாம் போலே...!

ராசாத்தி :— ஒனக்கு வெசயம் சரியா மட்டுப்படலே !...சேதி தெரிஞ்சா, இப்பிடி பிழைத்தமாட்டேப்பா நீ !...அன்னிக்கு ஒருநா எருச்சிக் காட்டிலெ மகுடி ஊதிப் பாம்பு புடிச்சுக்கிட்டிருந்தேனா, அப்பப்பாத்து, ஒரு கட்டுவிரியம் பாம்பு புஸ்ஸின்னு எரிஞ்சு விழுந்திச்சு எம் மேலே. நீ தந்து வச்சிரிந்த வேரிலே பெரிசை எடுக்கிறத்துக்கு எம்மடியிலே கையைப் போட்டேன். காணலே !... எனக்கு உசிரே பூடுச்சு ! நல்லவேளையா, வாமுனி சாமி சத்தியாலே அந்தச் சமயம் பாத்து, கணக்க விடுதி மச்சான் தம்புட்டு நஞ்சுவேரைக் காட்டி, பாம்பைத் தரையிலெ தள்ளிப் புடுச்சு; போகயிருந்த என்னோட உசிரு மீண்டுச்சு. இல்லாங்காட்டி, இன்னிக்கி நாஞ் செத்துத் தண்ணி தொளிச்சு மூணு பொளுது கடந்தோடி யிருக்கும் ! எங்கிட்டயிருந்த வேரு காணுமப் போனது கூட சாமி வேலையாத்தான் இருக்கும்; புது மச்சானை எங்கண்ணுப் பொறத்தால காட்டுறதுக்காவத்தான் எம்மடிவேரு மாயமாப் போயிருக்கும் ! நம்பு, அப்பாவ் !...

(முனியன் வீறுகொண்டு எழுகிறான். கைக்குத் தாவுகிறது மூங்கில் கொம்பு.)

முனி :— முசுடுப் பொண்ணே ! மூச்சுக்காட்டாம இரு !

ராசாத்தி :—எடுத்த கம்பாலே என்னை நாலு வாங்கு வாங்கிக்கிடு. அப்பத்தான் ஒனக்கு நெஞ்சு ஆறும் !... நீ இப்பிடி வயசுக் கோளாத்தாலே கண்டதையும் கடியதையும் பேசுவேன்னு தெரிஞ்சுத்தான், எம்மச்சானைக் கெஞ்சிக் கும்புட்டு வாயடக்கிக்கிடச் சொன்னேன். அது எம் பேச்சுக்குக் கட்டுப்பட்டது !...

முனி :— இல்லாட்டி, எம்பிட்டு உசிரை வாங்கிப்பூடுவானா அந்தப் பீத்தப்பய ?

ராசாத்தி :—எனக்கு உசிரைக் குடுத்த மவராசா ஏதுக்கு ஒம்புட்டு உசிரை எடுத்துக்கிடப் போகுது ?...

(முனியன் இருந்தவாறே நகர்ந்து, தாழியினுள்ளேயிருந்து அந்தம் மிகுந்த மகுடி ஒன்றை எடுத்துக் காட்டுகிறான்.)

முனி :— இந்த மகுடியை இப்பைக்கு என்னா செய்யச் சொல்லுறே நீ ராசாத்தி ?

(அதே சமயம், ராசாத்தியும் ஓர் அழகிய மகுடியை எடுத்துக் காட்டுகின்றாள்.)

ராசாத்தி :— எங்கையிலே இருக்கிற இந்த மகுடிக்கு நீ என்னாப்பா வகை காட்டுறே ?

முனி :— ஒந்தலையை மூணு கடுத்தம் சுத்தி அத்தெ வீசிப்பூட்டுப்பிடு. நீ செங்கோடனை மறந்து பூடணும். அதான் எம் முடிவு !... இம்மாங் காலத்துக்கு நம்ம சாதியாங்களுக்கு நானு ஒருத்தனே நாயம் பேசி வந்திருக்கேன். இப்ப ஒனக்கு நம்பவங்களுக்குள்ளாறவே ஈனப்பேரு வந்து மூளச் சேஞ்சுப்புடாதே மவளே ! இப்பவோ பொறகோன்னு ஊசலாடுற எம்புட்டு உசிரை நீயே எடுத்துக்கிடாதே ! .... தெய்வம் திருவுளத்துக்கு ஒப்பாது ?.... சின்னாயி குடிசையிலே இருக்கிற உந்தங்கச்சியை அநாதை ஆக்கிப்பூடாதே, ராசாத்தி !

(ராசாத்தி விம்முகிறாள்.)

ராசாத்தி :— வேளைக்கு எட்டுத் தக்கம் பத்து தக்கம் கள்ளச் சாராயத் தண்ணியைக் காணுமக் குடிச்சு வயித்தை ரொப்பிக்கிட்டிருக்கிற மாங்குடி ஆளை நான் கண்ணுப் பொறத்திலே காணமாட்டேன் !...ஆமா !...

முனி :— அப்பன்னா, அந்தச் செங்கோடன் மட்டுக்கும் உண்டன ரோக்கியனோ ? அவன் மட்டும் அந்தத் தண்ணியை நாடாதவனோ ?..

ராசாத்தி :— ஆமா ; நூறு வாட்டி சத்தியம் செஞ்சு சொல்லுறேன். அது நம்ம எனத்துக்கு ஒரு தங்கந்தான் !..

முனி :— மெய்யாலுமா ?

ராசாத்தி :— வாமுனுசாமி சத்தியமாத்தான் இந்த ராசாத்தி பேசுறேன்.

(சிறிது பொழுது முனியன் சிந்தனை வசப்படுகின்றான்.)

முனி :— சரிம்மா ! விடிஞ்சடியும் மாங்குடியிலே போயி மாடங்கிட்ட



அவந் தந்த மகுடியைச் சேத்துப்புட்டு வந்திட்றேன்!.. ஓம்மனசுப் படிவே, நீ நடந்துக்க. இப்பவே பறிஞ்சி, காவலிலே இருக்கிற செங்கோடனே விடுவிச்சு, மச்சான் வீரன் குடிசையிலே படுக்க வச்சு, விடிஞ்சதும் விருந்து பண்ணி, அதை ஊருக்கு அனுப்புச்சு வைச்சுப்புடுறேன்!.. சாமி காலிலே விளுந்து கும்பிட்டு, உடுக்குத் தட்டி, நீ செங்கோடன் பொறந்தாலே சாதி சனத்து உத்தரவு கேக்காமப் போனத்துக்குப் பத்து ரூவா அவராதம் கட்டிப்புட்டு, அப்பாலே நாலு ரூவாக் காசை மஞ்சத் துணி கிளிச்சு சாமிக்கு உண்டியல் செலுத்திப் பொறகாலே பரிசம் போட்டு, ஒன்னைச் செங்கோடனுக்குக் கண்ணலம் கட்டிக் குடுத்துப்பிடுறேன், ராசாத்தி!

(ராசாத்தி மெய்ம்மறக்கிருள்.)

ராசாத்தி :—அப்போவ்! வாமுனிதான் ஓம்மனசைத் திருப்பியிருக்கு, அப்போவ்! சுருக்கண ஏந்திரு, சுடு கஞ்சி ஊத்தறேன்!.. வெஞ்சனம் இன்னிக்கு தெரமா கெடச்சிருக்கு!

(பாசம் மகிழ்ச்சிக் கண்ணீர் பிரிக்கிறது.)

களம் : நான்கு

(பொழுது 'பலா'ரென்று விடிகிறது. செங்கோடன் அமர்ந்திருந்த வீரனின் குடிசை வாசலே அண்டுகிருன் முனியன். கிழடு தட்டிய அவன் முகத்தில் மலர்ச்சி இளமை காட்டுகிறது.)

முனி :— செங்கோடா! நீ இனிமெ எம்மாப்புள்ளே! தடங்கெட்டு நானு ஏதாச்சும் முன்னப்பின்ன சூடாவும் காட்டமாவும் பேசியிருந்தா, மனசுக்குள்ள பூட்டுக்கிடாதே!...அறிய அறியக் கெடமாட்டாங்கன்னு ஒரு பேச்சு இருக்குது. அதுக்கு ஏத்தமாதிரி நானும் ஆயிப்பூட்டேனுக்கும்!... பாலு ஊத்தி வளத்த நல்லது கடிக்காமத் தப்பா தின்னு மத்தவங்க சொல்லிக்கிடுவாங்க! நாங் கூட எம்மவ ராசாத்தி காரியத்திலெ அப்பிடித்தான் நெனச்சு மறுகிப் பூட்டேன். ஆனு அது ஒன்னைப்பத்தி பெரிசாச் சொல்லிச்சு. மகுடிக்குக் கட்டுப்பட்ட பாம்பாயிட்டேன் நானு!..நீ கள்ளுத் தண்ணியை கை நாடமாட்டியாமே? நெசமாத்தானு ...?

(செங்கோடன் தெளிந்த புன்னகையால் அழகுடன் திகழ்கிருன்.)

செங் :— ஆமாங்க மாமு!...எந்தாக் கல் ஒங்களுக்குப் பொறி தட்டினுப்லே தாம் படும். எங்கண்ணுப் பக்கமே கள்ளுத்தண்ணி லாவாரம் சாடை காட்டப்புடாதுங்க!... அன்னியதொட்டு இன்னியவரை இதாங்க நடப்பு!...நம்ம ராசாங்கத்திலெ கள்ளுச்சாராயத்துக்குத் தடை உண்டாக்கினப்புறம்,காணுக் கடவுலெ குடிக்கிறது பயந்தாங்கொள்ளித்தனம்!...அது நாட்டுக்குச் செய்யிற துரோகமுங்க!... ஒரு நா இல்லாட்டி மறுநா செகப்புத் தொப்பிக்காரவுக காப்பு மாட்டாம இருப்பாகளா?... கெட்டிக்காரம் புளுகுக்கு எட்டு நாத் தானே கெடு?...என்னு மாமு, நாஞ் சொல்றது...?

முனி :— எங்க வாமுனிசாமியே நேருத்தரமா வந்து பேசுறத்துக்கு ஒப்பா இருக்கு ஓம் பேச்சு!...

(செங்கோடனின் பற்களுக்கு மத்தியில் உயிர்ச் சிரிப்பு உயிர்ப்புக் காட்டி விளையாடுகிறது.)

செங் :— எங்க பெருங்கார முண்டா சாமிக்குப் பயந்து நடக்கோணுமின்னுப் பிட்டு, எங்கப்பன் மண்டையை மண்ணிலே அடிசாச்சப்ப சொல்லிக்கினிருந்தாரு!...அத்த நானு எங்காலம் மூச்சூம் மறக்கவே மாட்டேன்!...



(வீரன் கண்களைத் துடைத்துக் கொண்டு குடிசையின் வெளிப்புறம் வந்து நிற்கிறான். கோடை வெயில் ஏறுமுகம் காட்ட எத்தனம் செய்கிறது. மாணிக்கப் பசுஞ்சுடர் மேனி தளதளக்கிறது.)

வீரன் :— செங்கோடா ! எங்க ஆளுங்களை நீ தப்புத்தண்டாவா எண்ணிக்கிடாதே ! ... பழசுபட்டதை மறந்திரு ! வா, நாம வாயி கொப்பளிச்சு தேத்தண்ணி பலவாரம் சாப்பூட்டுப்புட்டு திரும்பலாம் !

(செங்கோடனின் இதழ்க்கடையில் 'முறுவல்' அடையாளம் சொல்கிறது.)

முனி :— வீரா...மச்சாவி, நீ மாப்புள்ளையை அழைச்சுக்கினு போ !... இந்தா ஒரு ரூவாக்காசு ! ... வவுறு முட்டச் சாப்புடச் சொல்லு !... நான் மாங்குடிக்குப் போயி அந்த மாடனுக்கிட்ட ஒரு சேதி பேசிப்பூட்டு வாரேன் !...செங்கோட மாப்புள்ளயை ஒன் குடிசைக்குள்ள போட்டுக்கிடு. மதியத்துக்கு ஒம் பன்னிக்குட்டி ஒண்ணு தலையெத் தட்டிப்பிடு. அப்பாலெ வார கௌமை காசு தாரேன் ! இதுக்கு விருந்து வைக்கோணும்.

(ஒரு ரூபாய் வெள்ளிப்பணம் இடம் பெயர்கிறது.)

வீரன் :— சொந்தஞ் சோவாரியானத்துக்குப் பொறவு, அதெல்லாம் மோக்ளாவா நடத்திப்பூடுவோம் ! ... நீ போ, பாட்டா ...!

(பன்றிக் குட்டிகளின் 'காட்டுக் கத்தல்' வளர்கிறது.)

முனி :— மாப்புள்ள, இன்னொண்ணு! இந்தச் சித்திரை முக்கத்துக்கு ராசாத்தியை மஞ்சத் தண்ணி தெளிச்சு ஒனக்குப் புடிச்சுக் குடுத்துப்பூடுறேன். ஒங்க சாமியைத் தொளுதுப்புட்டு, ஒம்புட்டு ஒறமொறைகளை ஒரு நா இட்டா. எஞ் சாமி சந்நிதிக்குப் போயி, அப்பன் வாக்கு வாங்கிக்கிடுவோம். இங்கிட்டாலெ ஒரு சேதி ! ...... எங்கிட்ட ஒரு காலத்திலெ பத்து அஞ்சு பொட்டை பன்னி இருந்துச்சு. இப்ப அதுக தொலைஞ்சிருச்சு !...எம் பொண்ணுக் குட்டிதான் எனக்கு இப்ப சொத்து சொகம் சாடாவும்! எம்மவ கண்ணாலத்துக்குச் சேத்து வச்சிருக்கிற நூறு ரூவாக் காசுதான் நானு சீரு தர ஏலும் !...நீ பரிசப்பணத்துக்கு எம்புட்டுச் செஞ்சாலும் சரி ! நானு வேண்டுறதெல்லாம் எம்மவளெ கண்ணு கசக்காம நீ காப்பாத்தோணுமிங்கிறதான் !

(உணர்ச்சி வசப்பட்டு நிற்கிறான் முனியன். தந்தைப் பாசம் அரசோச்சுகிறது.)

செங் :— ராசாத்தி எம்புட்டு உசிரானத்துக்கப்பாலே, அதானே எனக்கு ஒலகம் ! நீங்க மாமு, யாதொரு தாக்கலுக்கும் மூஞ்சியைச் சுளிக்கவேணும் !... ஒங்க மனசொப்ப நடந்திக்குறேன் ! ராவு நெலாவிலே நான் கொற வளக்குப் பேசி கொறம்பாடினத்தை மட்டுக்கும் மன்னிச்சிப்பிடுங்க !...ஊம் !...நீங்க எங்கனயோ போவணும்னிங்களே, நடங்க ! அப்பொறம் கால்சூடு தாங்காது ! ...

(செங்கோடனின் கையிலிருந்த வேய்ங்குழல் நாதம் பரப்புகிறது.)



களம்: ஐந்து

(ஊரின் குணதிசைப் பகுதியில், 'செட்டிய வீட்டுவளவு' மத்தியிலிருந்து பெரிய வீட்டின் முகப்பில், மண்டியிட்டுக் குந்திக்கொண்டு மகுடி வாசித்து, 'காட்டு விரியன்' பாம்பைக் கழுத்தில் கட்டிச் சீறி எழச் செய்து வேடிக்கை காட்டிக் கொண்டிருக்கிறான் முனியன். அவன் கழுத்தில் 'புடையன்' மாலையாகத் தவழ்ந்து கிடக்கிறது. வெய்யவன் உச்சிதொடும் நேரம்.)

முனி :— ஆச்சியோவ் !.. ஐயா சாமியோவ் !.. கண்ணைத் தொறந்து பாருங்கோ ! இந்தச் கிளவன் உசிரை அடகு வச்சு இந்தக் காட்டு விரியனை மல்லுக்கட்டிப் புடிச்சுப் பொட்டிக்குள்ள போட்டு பொட்டிப் பாம்பாக்கிப் புட்டேனுங்கோ !.. பாத்தீங்களா, எம் மாஞ் சீறு சீறுது ?.. எங்க கொலத்துக்குச் சீதனமா எஞ்சாமி தந்த இந்த வேரு கையிலெ இல்லாங்காட்டி, எம்புட்டு உசிரு இந்தப் பாளத்த பாம்பு வாயிக்கு அடகாகிப் பூட வேண்டியதுதான் !.. ஆச்சியோவ் !.. பளங்கஞ்சி ஊத்து தாயி ! செட்டியாரு ஐய்

யோவ்!.. ஒண்ணரைக் காசு, மூணு காசு நீட்டு சாமியோவ்..!

(தொண்டையைக் கனைத்துக் கொள்கிறான் முனியன். வீட்டுக்காரர்கள் கும்பலாகக் கூடவே, குதூகலம் விளைகின்றது. உள்ளங் கையில் மூடி வைத்திருந்த 'நாகதாளி' வேரை வலக்கையின் நுனி விரலையும் கட்டை விரலையும் ஊடாகப் பற்றிக்கொண்டு, மகுடி ஊதி பாம்புக்கு விளையாட்டு காட்டுகிறான். இடது கையிலிருந்த புகையிலை மட்டைக் குச்சியைக் கடித்து வாய்க்குள் அடக்கிக்கொண்டு, பாட்டுப் பாடத் தொடங்கினான் அவன்.)

முனி:—''ஊத்தக்குளியிலெ உண்டை சேத்தே வாய்ச்ச குசவனுர் மண்ணுப் பாண்டம் வரவோட்டுக்கு மாவாதின்னு ஆடாய் பாம்பே!''

(வளவில் இருந்த நான்கைந்து குடும்பத்திலிருந்தும் 'தர்மம்' கிடைத்த பழஞ்சோறு, காசு பணம் முதலியவற்றைச் சீர்செய்து எடுத்துக்கொண்டு, எச்சிலைத் துப்பியபடி, பாம்புப் பெட்டியும் கையுமாகப் புறப்படுகிறான் முனியன். அரசமரத்தைச் சுற்றிச் சென்று மடங்கும் தருணம், மாங்குடி மாடன் குரங்குடன் எதிர்ப்படுகிறான். கிழவனின் உடலில் சலனம் உண்டாகிறது. குனிந்த உடல் மேலும் கூனிக்குறுகுகிறது.)

மாடன் :— என்னுங்கறேன் மாமு. கண்ணை முதுகுப் பொறத்திலே மொளைச்சு வச்சுக்கிணு கண்டுங்காணுமை, நளுவுறே, ரெட்டைத் தலை மணியங் கணக்கிலே ...?

(ஒரு கணம் தயங்கியபின், தலையை நிமிர்த்துகிறான் முனியன். வியர்வை மணிகள் உருளுகின்றன.)

முனி :— யாரு, மச்சாவி மாடனுங் காட்டி...வெள்ளெழுத்து ; புரியலே !... அன்னிக்கு குடியிருப்புக்கு வந்து மகுடியைத் தந்துப்புட்டு வந்தப்ப கண்டது இல்லே...சொகமா இருக்கியா ?

(கம்பீரமான தோற்றத்துடன் வியர்வை வழிய நிற்கிறான் மாடன். முகத்திரையில் கலவரம் நெறி கட்டுகிறது.)

மாடன் :—ஒன் ஒதட்டிலே தேஞ் சொட்டுது; ஆனுக்கா, எம் மனசிலே ரத்தம் சொட்டுது...

முனி :—நீ என்னைத் தப்புத் தண்டாவா நெனச்சுப்பூடாதே, மாடா...... எம் மவதான் எனக்கு உசிரு. அது சொல்லைத் தட்ட ஏலல்லே.

மாடன் :—கருகப்பிலையை கொளம்புலே போட்டு வாசத்தை வாங்கிக்கிணு, எலையைத் தூக்கி வீசிப் போடுறாப்பிலே ஒன்னை ஆக்கிட்டான் செங்கோடன்...... ஊம்...காத்துக்கிட்டிருந்தேன் ராசாத்திக்காக. நேத்து வந்த பய கொண்டு கிடப் போறான். சுருக்குப்பையிக் காசு கரைஞ்சதுதா மிச்சம்......

(மாடனின் மூளையில் விழிப்புணர்ச்சி ஏற்படுகிறது.)

முனி :—செஞ்சத்த சொல்லிக் காட்டுறியே மாடா...வேணும்னு காசைத் தந்திட்றேம்ப்பா......

மாடன் :—சரி, சரி, இப்ப எங்கூட வாரியா?......செமத்தியா ஒனக்கு வயத்துக் கொட்டுறேன், மாமு.

(கிழவன் பதறுகிறான். கைப்பெட்டி நடுநடுங்குகிறது.)

முனி :—ஐய, நாம் மாட்டேன் ! ...... பொண்ணும் மாப்புள்ளயும் கண்டாக்க கோவிச்சுக்கிடும். இனிமே அந்தத் தண்ணிப்பக்கம் நாடவே மாட்டேனுக்கும்... அந்த நெனப்பு வரப்ப தேத்தண்ணி ஒரு மொணறு குடிச்சுப் பளகிக் கிடப் போறேன்...சரி, பசி கிள்ளுது, நாம் போறேன்......வார வெள்ளிக்கு எம்மவளுக்குக் கண்ணாலம்......விருந்து சோத்துக்கு நீ வந்துப்புடு, நாம் பறியிறேன்.

(கிழவன் முனியன் சென்ற திசையையே வெறிக்கப் பார்த்து நின்று கொண்டிருந்த மாடன், தன் பற்களை 'நறநற'வென்று கடித்துக் கொள்கிறான்.)

### களம் : ஆறு

(வளர்மதியின் மோகனப் பார்வைக்கு இலக்காகிக் கொண்டிருக்கிறது அந்த நாவல் மரம். இயற்கையின் இதயத்தோடு இதயம் பிணைத்து, அந்தரங்கள் கறகிறார்கள் செங்கோடனும் ராசாத்தியும். பருவம் தந்த சீதனமும் எழிற்குவியல் அறிமுகஞ் செய்து வைத்த கவர்ச்சிப் போதையும் இளைஞனின் முன் ஆலவட்டம் சுழல்கின்றன. அவளையே தொடுத்தகண் எடுக்காமல் நோக்கிக் கொண்டிருக்கிறான். மறு விநாடி பெரிதாக மூச்சுப் பறிகிறது.)

ராசாத்தி :— என்னு மச்சான், மண்ணுளியன் மாதி அம்மாந்தூரம் மூச்சுக் காட்டுறே ?

(செங்கோடனை நகை காட்டுகிருன்.)

செங் :— உளுந்து வாசனை கண்டா நாகம் தலைதூக்கியாடும்; தாழம்பூ வாடை வீசினு, பூநாகம் ஒடியாரும்; அதொத்து, பூமுடிச்சிருக்கிற ஒன்னைக் கண்டுக்கிட்டிருக்கிற நானு, பூலோகத்தையே மறந்துபூட்டேன்;... கொண்டைப்பூவு என்னை ஏங்கனவோ தூக்கிக்கிட்டுப் போயிக்கிட்டிருக்குது! ஆமா, ராசாத்தி!

(பிடித்து வைத்த நாணப் பதுமையென வீற்றிருக்கிருள் ராசாத்தி. 'மாருக்கை' சமன்செய்துகொண்டு திரும்புகிருள்.)

ராசாத் — வீணுக்குக் கேலி பண்ணிக்கிட்டிருக்கே நீ . . ?

செங் :— அதெல்லாம் இப்பவே முடிஞ்சிருச்சின்னு நெனச்சுப் புட்டியாலே ! .. பூ !... அதெல்லாம் நாளைக்களிச்சும் சொச்சம் இருக்குது!.. தாந்தாளி மஞ்சத்துணுக்கை காசிக்கவுத்திலெ முடிஞ்சு ஒந்தங்கக் களுத்திலே நானு கட்டினதுக்குப் பிந்தித்தானுக்கும் எம்புட்டு நையாண்டி நைத்தியம் அல்லாம் ஒயுமாக்கும். ஆனப்பட்ட ஒங்கப்பனே நம்ம வளியை விட்டுப்பட்டு விலகி நின்னுகிட்டிருக்குது. இனிமே, நமக்கு என்னு அச்சங்கிறேன் ? அதாலதானே இந்தச் செங்கோடப் பயலுக்கு ஒசத்தியான சோறு கெடைச்சிக்கிட்டிருக்கு...

ராசாத்தி :— வாய்க்கு மெய்யான சேதிதாம் மச்சானே !

(அப்பொழுது, மரத்தைச் சுற்றி வளைத்துக் கொண்டு நாகப்பாம்பு ஒன்று ஊர்ந்து வருகிறது. ராசாத்திதான் எடுத்த எடுப்பில் பார்க்கிருள், செங்கோடனைக் கையைப் பற்றி இழுத்து அப்பால் தள்ளி விடுகிருள்.)

செங்கோடன் :— என்னு ராசாத்தி ? ...பல்லுப்புடுங்காத பாம்பு வெசம் மண்டை கொண்ட மாரிதி அப்படி பேய் புடிச்சுக் குந்தியிருக்குறே ?

ராசாத்தி :— பாம்பு மச்சான் ? நாகப் பாம்பு மச்சான் !

(பேச்சுச் சுவையில் இருந்த ராசாத்தி திடீரென்று செங்கோடானின் அலறல் ஒலியைக் கேட்டு பாம்பின் வாய்த் தேரையென ஊசலாடுகிருள்.)

செங்கோடன் :— ஐய்யய்ய !...பாம்பு கடிச்சிடுச்சே !...... அப்பாவோ !...... ஆயியோ !...ராசாத்தியோ......

(செங்கோடன் தவிக்கிருன். இடது கையை வலது கையால் இறுக்கமாகப் பிடித்துக் கொண்டு துடித்துக் கொண்டிருக்கிருன். ராசாத்தி பரிதவிக்கிருள்.)

ராசாத்தி :—மச்சான், பொட்டன ஓம் பீச்சங்கையை இங்காலெ குடு. சோத்துக்கையை எந்தோளிலே வச்சுக்க. ரோசாக்காதே மச்சான் ! இது ஒன் ஒடமைதானே ?... கடிவாயை நானு உறிஞ்சி, நஞ்சை வாங்கித் துப்பிப்பூடுறேன் !

செங்கோடான் :—ஆத்தாடி, வேணும் அந்தப் பொல்லாப்பு ஒனக்குச் சாரப்புடாது !... அப்பாலே நஞ்சு மண்டை கொண்டுபுடும். புதுப் பாப்பு பொல்லாதது... நீயோ புதுப் பூவு !

(ராசாத்தி விம்முகிருள். கண்டாங்கிச் சேலையிலிருந்த வண்ணத்திப் பூச்சிகள் எம்பிப் பறக்கின்றன. பித்தளை மூக்குத்தியும் 'கருகுமணி கழுத்துச் சங்கிலி'யும் நிலவொளியில் உயிர்த்துடிப்பைப் பிரதிபலித்துக் காட்டுகின்றன.

ராசாத்தி :— மச்சான், நீ இல்லாக் காட்டி, நானு இல்லே!...நாலு பேருக்கு முந்தானை போடுற வடக்கத்திக் கொறத்தி வகை இல்லே நானு... ! நெனச்சுக்க... நானு ஒஞ் சொத்து...என் உசிரு மண்ணுக்குள்ளாற போறப்ப, அத்தோட என்னதும் தொலஞ்சுப்பூடும், கையை நீட்டு மச்சான் ; மாட்டியா ?... இந்தாலே பாரு, நானே கையைப் புடிச்சுக்கிடுறேன் !

(ராசாத்தி அவனை அண்டி அமர்ந்து அவனது இடது கையைப்பற்றி, பாம்புக்கடிபட்ட இடத்தைத் தேடுகிருள்)

செங் :—ராசாத்தியோவ் !

ராசாத்தி :—பாம்பு பல்லே வச்சலெக்கே மட்டுப்படலீயே !

செங் :—பாம்பு எம்மேலே வாயை நாடியிருந்தாத்தானே, பல்லுத் தடம் புரியும் ?

ராசாத்தி :—அப்பன்னு, ஒஞ் சொல்லுப் பொய்யிதானு? அம்புட்டும் வெறும் பாவலாத்தானு?...ஐய்ய.

செங் :—ஊக்கூம்.

ராசாத்தி :—என்னை நீ சோதிச்சியா, மச்சானே ?

செங் :—ஊம்ம். ஊக்கூம் !

ராசாத்தி :— ராசாத்தி பேரிலே ஒனக்கு ஐயரவு விளுந்திருச்சாங்காட்டி.

(கமுக்கமாகச் சிரித்துக் கொண்டிருந்தவனுக்கு அச்சம் தலையெடுக்கிறது.)

செங் :—தப்பு தப்பு...எஞ் சாமி சத்தியமா லவலேசங்கூட அம்மாரிதி எதுவும் எம்பூட்டு நெஞ்சிலே ஓடல்லே. சும்மா வெளையாட்டுக் காட்டினேன். நாகலோகத்திலேருந்து பாம்பு வந்தாக்கூட அது சம்பம் நொடிகூட எங்கிட்டச் சாயமாட்டாது......

(அவன் கை விரல்கள், இதயத்தின் நெஞ்சுத் திண்மைக்கு முத்திரை பிடித்துக் காண்பிக்கின்றன. மறு கணம் சீறிக்கொண்டிருந்த நாகப் பாம்பின் வாலை லாகவமாய்ப் பற்றிச் சுழற்றித் தரையில் அடிக்கிருன். பாம்பு ஓடுகிறது, 'தப்பித்தோம் பிழைத்தோம்' என்ற பாவனையில்.)

ராசாத்தி:—மகுடி இல்லாமயே பாம்பு வாயைக் கட்டிப்பூட்டியே மச்சான் ?

செங் :—நீதான் மகுடியா இருக்கியே, அப்பாலே அசலான மகுடி ஏதுக்கு!......

(நாணிக் கோணுகிருள் அவள். மேனி எழிலை 'எழிலார் நிலா' மிகைப்படுத்திக் காட்டுகிறது.)

ராசாத்தி :—பாம்பு வேர் கூடல்ல அவயஞ்சமயத்துக்கு ஒங்கிட்ட இல்லாமப் பூடுச்சு:

செங்:—நானு பாம்பு புடிக்க வந்தாக்கதானே, அதெல்லாம் கைக்குக் காப்பாக் கொண்டாருவேன்......இப்ப நானு வந்தது ஒன் மனசைப் புடிக்கவாக்கும்...

ராசாத்தி :—அதுக்காகத்தாஞ கூத்தாடினே, மச்சான்?

செங் :—இல்லெ இல்லெ...அது ஒம் மூஞ்சியான மூஞ்சிலே கள்ளச் சிரிப்பை உண்டாக்க...

ராசாத்தி:—நீ பெரிய ஆம்பிளைதான்.




செங் :—இல்லாங்காட்டி நீ ஏம வசம் ஆகிடுவீயா?

ராசாத்தி :—போ மச்சான் !

செங்:—வா புள்ளே !

(அவளது பூங்கரம் பற்றுகிருன் அவன். வெட்கமும் இன்பமும் வரி வடிவங்களை கரம்பிணைத்துக் கொண்டு அழைத்துச் செல்கின்றன.)

ராசாத்தி :— எனக்கு ஒடய உசிரான உசிரை நீ காத்தே! அது போலே நானும் ஒம்பிட்டு உசிரைக் காத்துப்பிடனும்னும், அதுவுக்கு ஒரு அதிட்டம்



கெடைக்கோணும்னு தவங்கெடந்தேன். ஆஞ, வந்தது வளியோட பூட்டுது !...

செங் :— அப்பிடி ஒம்மனசுக்குப்பட்டுச்சுதின்ஞ, இப்பவெ தொளுவங்காட்டுக்குக் கம்மாக் காட்டுக்குள்ள பூந்து பாம்புப் புத்திலே ஏங்கையை வுட்டுப் பூடுறேன், ராசாத்தி...

(பேச்சு முடிந்ததும் சிரிக்கிருன் அவன். அடுத்த விநாடி, நடந்தவன் நிற்கிருன். எதிர்ப் பக்கத்தில் ஆவாரம்பத்தைக்கு ஊடே, ஏதோ சலசலப்புப் புறப்படுகிறது. ஆகவே, இடுப்பில் செருகியிருந்த சந்தைப்பேட்டைச் 'சூரிக்கத்தி' யை எடுத்துச் கழற்றி வீசுகிருன்.)

ராசாத்தி :— என்ஞ மச்சான், கத்தியை வீசிப்பூட்டே ?

செங் :— கண்ணடிப்பட்ட பாம்பே தப்பிச்சுக்கிட ஏலலே; மனுசன் மட்டும் மறுகிக்கிஞ ஓட வசப்படுமா ... என்னமோ சமுசயம் தட்டுச்சு ! கத்தியை வீசினேன். பாம்பை முட்டையிலேயே நசுக்கிப் போடணும்னு ஓசந்த பொறப்பிலே ஒரு பேச்சு நடக்கும். அதுக்கு ஒப்புதலையாத்தான் நாஞ்செஞ்சு பாத்தேன், ராசாத்தி.

ராசாத்தி :— மச்சானே, இங்கிட்டாலே திரும்பு !

செங் :— ஊம் !

( செங்கோடன் அவளது குறிப்புக்கு இணங்கித் திரும்புகிறான். அவள் அவனை நோக்கிக் கரங்கூப்பிச் சிரம் வணங்குகிறாள்.)

ராசாத்தி :— ஏ மச்சான். ஒனக்கு ஆயுசு கெட்டி! நீ எஞ்சாமி! அதாலதான் ஒன்னை அண்டவந்த இந்தக் கண்டங் கருவளைப்பாம்பு கூட அடிபட்டிருச்சினு! அந்தாப்பாரு ரத்தம் ! அது மேலே பட்டாக்க, தோளுலெ வெள்ளை விழுந்திருமாம் !

செங் :— இன்னிக்கு நானு நரி மொகத்திலேதான் முளிச்சிருக்கோணு மிங்கிறேன். அரை நாளிக்கு ரெண்டு பாம்பு வந்திச்சே? இதே மாரிதி நெதம் வந்தா, காட்டிலெ அலையவேணுமே ? இங்கணவே குந்திக்கினு பாம்பு வாயைக் கட்டிப்புடிச்சிப் பொட்டிக்குள்ளாற அடச்சுப்பூடலாமே ?

ராசாத்தி :— நீ மெய்யாலுமே நரி மூஞ்சிலெதான், கண்ணு தொறந்திருப்பே. நீ ஒண்ணு பண்ணு ! பாம்பை அப்பாலெ புடிக்கலாம். எடுத்தவுடனே நீ ஒரு நரியைப் புடிச்சுக்கிடு. அதுக்கு, மேக்காலெ வந்திருக்கிற நரிக்கொறச் சாதி துப்புச் சொல்லும் ! நரியைப் புடிச்சுக் கினு கட்டிப் போட்டுக்கினு காலம்பற அது கண்ணுலே முளிச்சுக்கிடு. உண்டனே பாம்பு வரும் !

செங் :— அந்தச் சங்கடம் என்னாத் துக்காம்? படுத்து எந்திருச்சு ஓம் மூஞ்சிலே விழுந்தாப் போதுமே, கூடாத காரியம் அல்லாம் கை கூடி ஓடியாருமே? தேடி வாராத காசெல்லாம் நாடி வருமே ?

(முனியன் அழைக்கும் குரல் காற்றில் மிதந்து வருகிறது. நடந்து வந்த செங்கோடன், வழியில் மறித்துக் கிடந்த கத்தியை மண்ணில் தட்டி எடுத்துக் கொள்கிறான். மரித்துக் கிடக்கிறது: 'கண்டங்கருவளை'. அதற்குப் பக்கத்தில்,சாயத்துண்டு ஒன்று கிடக்கிறது. அதை எடுத்துப் பார்த்து வீசிவிட்டு நடையைத் தொடருகிறான் அவன்.)

ராசாத்தி :—யாரோ ஆம்பளை வுட்டுப் பூட்டாங்க, பாவம்! என்னுங்கிறேன் மச்சான். அப்பிடி அத்தெயே பாக்கிறே? அது வெறும் லேஞ்சுலே!... வருவியா. அப்பன் அலட்டுது !



(செங்கோடன் விழிகள் வழியை அளக்கின்றன. கைகொடுக்கிறது காரிகையின் கள்ள விழிப் பார்வையும் தண்மதியும்.)

களம் : ஏழு

(ராசாத்தி வாசலில் வந்து நிற்கிறாள் பாம்புப் பிடாரன் முனியன் வேர்க்க விறுவிறுக்க வந்து, கைத் தடியை வீசிவிட்டு, தோளில் பற்றி யிருந்த பாம்புப் பெட்டியைப் பதமாக பிடித்துக் கீழே தரையில் வைக்கிறான். தலையில் சுற்றி யிருந்த துணிக் கிழிசலை அவிழ்த்து முகத்தை துடைத்துக் கொள்கிறான். மீசையை முறுக்கி விடுகிறான். கற்றாழை நார் திரித்த கயிறு 'வாலைச் சுருட்டிக் கொண்டு' முருங்கை மரத்தடியில் கிடக்கிறது. அதை கோலால் தள்ளி விடுகிறான் கிழவன். பிறகு, பாம்புப் பெட்டியைத் திறக்கிறான். மகுடி ஒலிக்கிறது. நல்ல பாம்பு படமெடுத்து ஆடுகிறது. அப்போது இருபது நாழிப் பொழுது.)

ராசாத்தி :— ஏப்போவ் !... ஏதுப்பா இந்த நல்லது...? வசமா ஆப்புட்டிருக்கே ஒங்கையிலெ ?

முனி :— ஆப்புடாம, பின்ன எப்பிடி யாந் தப்பும் அது ?...இதுக்காவ விடி வெள்ளி காட்டினதிலேருந்தில்ல எரிச்சிக் காட்டிலெ அன்னந்தண்ணிகாணுமெ சுத்திக்கினு இருந்தேன்!...புதுப் பொண்ணு ஆவப்போற ஒனக்குப் புருசன் வூட்டுக்குப் போகையிலே சீரு குடுக்கிறத்துக் காவத்தான் இதெ மெனக்கெட்டுப் புடிச்சாந்தேன், மவளே ராசாத்தித் தங்கம் ;

(ராசாத்திக்குப் பெருமை பிடி கொடுக்காமல் 'பாய்ச்சல்' காட்டுகிறது.)

ராசாத்தி :— சரிதாம்பா ! நீ வாரீயா, கஞ்சி ஊத்துறேன் !...

முனி :— ரவை நாளி பொறுத்திருவே ராசாத்தி. இந்த நல்லதைப் புடிச்சு வெசத்தைக் கட்டிப்புட்டோங்கிற சந்தோசமும், இத்தெ கை வைக்க இந்தச் செகல்தப்புன ஒடம் போடவும் முடிஞ்சி தேயின்னுற கருவமும் எனக்கு ரொம்ப ஒசத்தியாத் தோணுது !...அது...தொல யிது !...உம்மச்சான் நேத்தைக்கு சாளச் சந்தையிலெ வாங்கி அனுப்பிச்ச சீலே, மேத்துனி மனசுக்கு ஒத்திருக்கா ?

ராசாத்தி :—ஒ !

முனி :—கொண்டை ஊசி, லப்பர் கொலுசு, காலுமிஞ்சி, நத்து, புலாக்கு அல்லாம்...?

ராசாத்தி :—தரமாயிருக்கு.

முனி :—கொள்ளே ஆசை உம்மேலே அதுக்கு...எ...எ...எம்மவளுக்கு வெக்கத் தப்பாருடோய், ஏலே வீரா, தம்பிப் பயலே மூக்கா, முண்டா.

(கிழவன் கைதட்டிச் சிரிப்புக் காட்டு கிருன். குமரிக்கு உண்மையாகவே வெட்கம் வந்து விடுகிறது.)

ராசாத்தி :—வரலே குடிக்கிறதுக்கு.

(முனியன் திகைக்கிருன்.)

முனி:—என்னு ராசாத்தி?

ராசாத்தி :— கஞ்சி குடிக்கிறதுக்கு வரலே ?

முனி :—ராசாளி வாயிலே ஆப்பூட்ட ஓலேப்பாம்பு சாடையிலே தெகச்சுப்பூட்டேன் நானு. பழசு பட்டதில்லாம் நெனப்பு ஓடுச்சி. கஞ்சி குடிக்கவா கூப்பிட்டே?......நானு பொளச்சேங்காட்டியும்? அன்னிக்கு ஒரு நாத்து, மாங்குடி மாடனே ஏகதேசமா பாதையிலே கண்டு புட்டேன். எனக்கி கள்ளுத்தண்ணி ஊத்திப்போட மருந்துவச்சுக் கூப்பிடுற தொத்து வசியம் பண்ணிஞன் !... நானு முடியாதிடா பயமவனேன்னு மனசாலே கறுவுக்கிணு, வுட்டுப் பறிஞ்சாந்திட்டேன் மவளெ...

(ஆறுதல் பெருமூச்சு எழுகிறது — இரு பக்கங்களிலும்.)

ராசாத்தி :— இம்பூட்டுக் காலமும் வவுத்தெக்கட்டி வாயைப் பொத்திச் சம்பாரிச்ச ஒண்ணு ரெண்டு காசெல்லாம் கல்லாக் கரியா ஆனது போதும்ப் பாவே !

முனி :— இனி அதெல்லாம் தப்புத் தாண்டா போவமாட்டேன் !

ராசாத்தி :— நம்ம புது மச்சானேகூட அப்பவும் இப்பவும் நம்ம வகையானுங்க தண்ணி ஊத்திக்கிட்டு கூத்தாட கூப்பிடுருங்களாம் !... அவனுங்களே ஏசிப் பேசித் திட்டிப்புடுமாம் !

முனி :— செங்கோடன் மாப்புள்ள நம்ம கொறப்படையங்களுக்கு ஒரு வெலக்கு !... வாமுனியாந்தான் ஒனக்கு இந்த ராசாவைப் புடிச்சுப்பூட்டிருக்கும்:

ராசாத்தி :— நானு ராசாத்தி... ! அது ராசா ...!

[நகை, முகை விரிகிறது]

முனி :— கணக்குவிடுதி மாப்புள்ள ஒனக்கும் பரிசச் சீருக்கு ரெண்டு பொட்டைப் பன்னி, நாலு பாம்புக, துணிமணி, நூறு ரூவா காசு அல்லாம் தரப் போவுதாம். நானு கண்ணுலச் சீருக்கு சாதிப் பன்னி நாலு வாங்கி ஒனக்குத் தரப் போறேன்: அப்பாலே இந்த நல்லது !... அதுபோவ, பணம் நூறு ரூவா! ஊம் !...நாளேக்கி இம்மாம் பொளுதிலே ஓங்களுத்திலே பறக்கொட்டோட மஞ்சக் கவுறு குந்திக்கிட்டிருக்கும் !...சாமி கும்புட்டு, பன்னி அடிச்சி ஒறமொறைப் பந்தி வச்சு, மஞ்சக்கயிறு முடிஞ்சிருச் சின்னுக்க, எம்பாடு வுட்டுச்சி ! ... ஒன் ஓடப்பொறந்ததும் மத்தச் சொந்தக் காரவுகளும் விடியவந்தி விருந்திடுவாக !

ராசாத்தி :— எம் மச்சானுக்கு ஒண்டி ஆட்டு எறைச்சி ஆக்கோணும் !

முனி :— ஆமா, அன்னிக்கவே அத்தெத் தொடல்லியே?...வாய்த்தவமாவ, செங்கோடன் மாப்புள்ளப் பொடிசு அதிசயமாத்தான் இருக்கிது !

ராசாத்தி :— போன செம்மத்திலெ செஞ்ச பாவத்துக்கு இந்தக் கீழ்ச் சாதியிலெ பொறந்திருக்குமின்னு மனசை அலட்டிக்கிடுது, அப்பாவ்!...ஆனலும், இப்ப நம்பளே ஆளுறவுக சாதி சங்கடத்தெ வெரட்டிப் புட்டாங்களாம்: மிஞ்சியிருக்கிறதை வெரட்டிப்புட்டிருக் காங்களாம்: மச்சான் காயிதத்திலே படிச்சு சொன்னிச்சு !...

[முனியன் ஏதோ ஒன்றை நினைவு படுத்திக் கொண்டு சிலிர்த்தெழுகிருள்.]

முனி :— ராசாத்தி, மாங்குடி மாடனேக் கூட விருந்துக்கு அளச்சிருக்கேன் !

ராசாத்தி : அத்தெ ஏங்கூப்புட்டே? அத்த ஆம்பளே பேரைக் கேட்டாக் கூட வவுத்தைக் கலக்குது !...பாம்பைக் கண்ட பட்டாளத்தான் போல மனசு நடுங்கிச் சாவுது !...

முனி :— அதெல்லாம் பயப்புடாதே ! மாடன் இப்ப நல்ல ஆளு. என்னேக் கெடுத்தான்; இப்ப நல்லவன் ஆயிட்டான் ! காலிலே பலக்கக் கட்டுப் பூட்

டிருக்கான். எழுந்திட்டானும். கெந்திக் கெந்தி நடந்தான். எப்பிடியும் வந்திருவான்! ...... நானு ஒன்னே அவனுக்குக் குடுக்கலேயின்னு ஆத்திரப்பட்டு அடாபுடி பண்ணுவான்னு ரோசிச்சேன். நல்ல காலம், காலேச் சுத்தின எட்டடி விரியன் கடிக்காம ஓடிருச்சு? ..... பாவம், ராசாத்தி!...மறந்தேனே!... அவன் ஒனக்குக் கண்ணுலத்திக்குப் பொருளு ஒண்ணு பிரியமாக் குடுக்கப் போறதாவும், சொல்லச் சொன்னுன்! ஒன்னே ரொம்ப சாரிச்சுக்கிஞன்! சரி, நீ இரு. சாயாக் கடை சேர்வைகிட்ட போயி, காந்த வெளக்கு ஒண்ணு வேணும்னு மூச்சுக்காட்டிப்புட்டு வாரேன்!

(தந்தை சென்றதும் மகள் நெடுமூச் செறிகிருள்.)

## களம் : எட்டு

(இரண்டு கை முழம் கட்டைச் சுவரில் கண் காட்டிக் கொண்டிருக்கிறது. முகம் காட்டும் கண்ணுடித் துண்டம். அரக்கு மஞ்சள் அப்பப் பட்டிருந்த நெற்றிமேட்டில் 'சாந்துப் பொட்டு' தளதளக்கிறது. அரையில் மேகவர்ணம் 'சுங்கடிக் கூறை'ச் சேலை ஒயில் காட்டுகிறது. மார்புக் கச்சை முடிச்சுக் காண்கிறது. வெளியே எட்டிப் பார்க்கிருள். அவளது நேசமிகு ஆசை மச்சான் செங்கோடன் விழிகளில் காதற் கனவுகளை விளையாட விட்ட வண்ணம், வாசலில் கிடந்த சுக்கான் கல்லில் அமர்ந்திருக்கிறுன். பார்வையும் பார்வையும் மோதுகின்றன. சிரிப்பும் சிரிப்பும் களிப்புச் சிந்துகின்றன வில்லும் களி மண்ணுலான கவண் கற்களும் அவனுக்கும் பொழுது போக்குப் பொருள்களாகின்றன. அவள் தன்னுடைய விழிகளைத் திசை திருப்புகிருள். தன்னைத்தானே குனிந்து நோக்கிக் கொள்ளுகின்ருள் ராசாத்தி. கண்ணுடித் துண்டங்கள் ஒன்று கூட்டிவைத்த பவழமணிமாலையை 'அழுத்திவிட்டு' மஞ்சள் துண்டை ஏந்திய மஞ்சக் கயிறு ஒளிகாட்டிக் கொண்டிருக்கிறது. வெற்றி கண்ட தன் வாழ்வின் கனவு அவளது சிந்தை வெளி அத்தாணி மண்டபத்தில் கொடி கட்டிப் பறந்து கொண்டிருப்பதாகவே தோற்றம் தருகிறது; தோற்றம் சொல்லுகிறது. சிரிக்கிருள்: சிந்தைதனைப் பறித்துக் கொண்டவனை ஏற்றம் கொள்ளச் செய்யும் வகையில் சிரிக்கிருள்; சிரித்துக் கொண்டேயிருக்கிருள் ராசாத்தி. அந்தம் நிறை அந்திப்போது.)

செங் :—ஏலே, ராசாத்திக்குட்டியோ.

(ராசாத்தி கனவின் விழிப்பில் துயில் கலைகின்ருள்: மச்சானை ஏறெடுத்துப் பார்க்கிருள்; வெட்கம்.)

ராசாத்தி :—என்னுங்கிறே மச்சான்...

(அவளை நெருங்குகிருன் அவன். எட்டடிக் குச்சில் பெருமூச்சின் இழைகள் மட்டுமே அமைதிக்கு உதாரணம் பகன்றவாறு இருக்கின்றன. கரம் பற்றுகிருன் அவன்.)

செங் :—ராசாத்தித் தங்கமே!...... சும்மா வாலே...!

ராசாத்தி :—ஊக்கும்! அல்லாம் அப்பால ஆவட்டும்...! ஆமா! ஆமா... அந்தா அப்பன் வாராரு!...

(முனியன் வந்து நிற்கிருன், வாசல் பகுதியின் மையத்தில்.)

முனி :—மாப்புள்ளே!...விருந்து மருந்தல்லாம் முடிஞ்சிருச்சி மாப்புள்ளெ, பொண்ணுங்களோ!...

செங் :—நல்லது மாமாவ்!

ராசாத்தி :—ஆமா, அப்போவ்!

(அப்போது, மாடன் வயிறு புடைக்க நடந்து வந்து நிற்கிருன். வயிறு பூராவும் சந்தனக் கோடுகள் திகழ்கின்றன. சாயவேட்டியை முழங்காலுக்கு மேலே வரிந்து கட்டிக் கொள்கிருன் அவன்.)

மாடன் :—செங்கோடா, நீ பொறப்பு தொட்டு தண்ணியைத் தொட்டுப் பளக்கல்லே!... நானு இன்னிய தொட்டு அத்தெ கண்ணெடுத்துப் பாக்கவே மாட்டேன். நம்ம வாமுனியாஞ்சத்தியம் இது!... சின்னதுங்க; நீங்க ரெண்டு பேரும் பேசிக்கிணு குந்துங்க. நானு போயி, ஒங்க ரெண்டு பேருக்கும் பரிசு ஒண்ணு கொண்டாந்து தாரேன்! புதுசான மகுடி ஒண்ணு தரப்போறேன், செங்கோடா!

(செங்கோடன் கிளர்ந்தெழுந்த புதிய இன்பத்தின் விளிம்பில் நிற்கிருன். அப்போது, பாம்புச் சீற்றத்தின் ஒலி மெல்லக் கேட்கிறது. செங்கோடன் நகர்கிருன்.)



செங் :— ஏலே ராசாத்தி, இன்னிக்கு ராவு நம்மளுக்கு திருவிளாயில்லீயா ? அதுக்காவ, மதியத்தாலே போயி ஒரு நாகப் பாம்பைப் புடிச்சாந்தேன் !... நம்மளுக்கு ராவுக்குக் காவல் வாணுமாங் காட்டி...? சத்தியத்துக்குக் கட்டுப்பட்டது இந்த நல்லதுதானே...? புதுசு ; சீறுது : நீ நகண்டுக ; இந்தாலே வர்ரேன்!

(நஞ்சைக் கக்க வைக்கும் 'குடோரி' எனும் 'விஷவேர்' செங்கோடனின் விரல்களில் தவழ்கிறது. நாகப்பாம்பு சீறி அடங்குகிறது. மாடன் சிரித்துக் கொண்டேயிருக்கிறான்.)

மாடன் :— செங்கோடா, இன்னொரு தாக்கல் தகவல் சொல்லோணும் !.. ஒருநா நானு பெருந் தப்புதலை பண்ணிப் புட்டேன் !...நீங்க ரெண்டு பேரும் பேசிக்கினிருக்கிறப்ப, நீங்க ரெண்டு பேருங்களும் ரெண்டு தினுசுப் பாம்புகளைக் கண்டீங்களே, அதுக ரெண்டும் நானு ஏவின தாக்கும் !...குடிபோதையிலே தப்பு எண்ணம் தோணிருச்சு. நீ வீசின கத்திக்குத்து காலிலே பட்டிருச்சு. அது எனக்கு எப்பவும் நெனப்பு இருக்கும். ஆனாலும், மதியத்திலெ நானு இங்கனே விருந்து சாப்பிட்டேனில்ல ! அந்தச் சோறு உள்ளெ போனடியும், எம்மனசே திருந்திருச்சு !...அதான், கொஞ்சத்துக்கு முன்னாடி நான் நல்லவனா மாறிப் பேசினேனாக்கும்...! சரி, நீங்க சின்னதுக ; பேசிக்கினு இருங்க. அப்பறமா, மகுடி கொண்டாந்து தாரேன் !... ஏ மாமாவே...! வா, நகண்டுக்கிட்டு வா ! அதுக பேசிக்கிடட்டும் !

(காதற் சிரிப்பு களிநகை புரிந்து கொண்டிருக்கிறது.

களம் : ஒன்பது

(அணி நிலவு அழகு கொண்டு விளக்கம் சொல்லிக் கொண்டிருக்கின்றது. மதுமலரென காட்டுப்பூ ராசாத்தி நிற்கிறாள். பருவம் சுமந்த பாவையின் பூரித்த உள்ளம் எம்பித் தணிகிறது. ஜரிகைத் 'துப்பட்டா' திகழ, வேப்பெண்ணெய் மணம் பரப்ப, சுருட்டைத் தலையில் முண்டாசுடன் நிற்கிறான் செங்கோடன். குறக்குடிகள் ஆண்களும் பெண்களுமாகக் சுற்றிச் சூழ்ந்து இருக்கிறார்கள். 'பறைக் கொட்டு' முழங்குகிறது.)

முனி :—இந்தாலே பூவாயி !... நம்ம ராசாத்தியை உள்ளாற பூட்டுப்பூடு...லே

வீரன் :—செங்கோடா...! ஓடு... உள்ளாற... ! 'லா' பறிஞ்சிருச்சிது !

(மணமகளை அவள் தோழி கைப் பற்ற, மணமகனை அவன் தோழன் பிடித்துக் கொள்ள, மணமகனும் மணமகளும் முனியனை வணங்கி எழுகிறார்கள். அப்போது, மாடன் கையில் தாங்கிய அழகுமிகு மகுடியுடன் வந்து சேருகிறான்.)

மாடன் :—இந்தா செங்கோடா ! ஒனக்கு என்றோட பரிசாக்கும் இந்த மகுடி !...

(மகுடி செங்கோடனின் கைகளுக்கு மாறுகிறது.)

ராசாத்தி :— என்னை நல்ல மனசோட ஆசீர்வாதம் பண்ணு, மாடன் அண்ணாச்சியோ !

(ராசாத்தி, மாடனின் பாதங்களைத் தொட்டு வணங்கி எழுகிறாள். அது சமயம், மாடனின் உடல் பூராவும் பூகம்பமாகிறது. அவள் திரும்பிப் பார்க்கும் போது, புதிய மகுடியை செங்கோடன் வாய்க்கு அருகில் கொண்டு செல்வதைப் பார்க்கிறான்.)

மாடன் :— செங்கோடா ! ஒனக்கு அந்த மகுடியை ஊதத்தெரியாதாங் காட்டியும் ! இங்காலே வா ! நானு ஊதிக்காட்டுறேன் !

(விரைந்து சென்று செங்கோடனிடம் இருந்து தன்னுடைய மகுடியைப் பறித்துக் கொள்கிறான் மாடன். வெறிமூள அந்த மகுடியை உதட்டுக் கோளத்தில் பொருத்தி ஊதுகிறான். ஊதிக்கொண்டேயிருக்கிறான். மறுவினாடி, மாடன் தரையில் சாய்கிறான். மேனியில் நீலம் பரவத் தொடங்குகிறது.)

ராசாத்தி:— ஐய்யய்யோ, அண்ணாச்சி! மாட அண்ணே...!

முனி :— மாடா! என்னாலே இத்தெல்லாம்? ஒண்ணுமே மட்டுப்படலையே?

(வாயில் நுரை தள்ளுகிறது. மாடன் மெல்லத் தரையில் இருந்து தலையை உயர்த்துகிறான். மகுடி உருள்கிறது. அரைகுலையத் தலைகுலைய தடுமாற்றம் விளைகிறது.)

மாடன் :—ராசாத்தி! நீ சத்த முந்தி அண்ணேண்ணு அளைச்சியே, அந்த ஒரு பேச்சுத் தாந் தங்கச்சி மெய்யாலுமே என்னை மனுசனா ஆக்கிச்சுது! அந்திக்கு நான் நல்லவனா மாறினதா சும்மா நடிச்சேன். அப்பதான் என்னோட வஞ்சம் நல்ல வெதமா கூத்து நடத்துமின்னு தந்தரம் செஞ்சேன்! இப்ப என் வெனை என்னை சுட்டுப்பிருச்சு!.. நான் செங்கோடன் கையிலே குடுத்த மகுடிக்குள்ளஅப்பிடியே நஞ்சுப்புகை அடங்கிருக்கிது! நல்ல தோட வெசம் உள்ளாறஎறங்கி யிருக்குது! செங்கோடன் கையிலெ எடுப்பிலே அந்த மகுடியை தொடுத்ததிலவும் காரியம் இருக்குது. அவன் ஊத ஆரம்பிச்சா, அப்பவே அவந்தலை மண்ணுக்குப் பறிஞ்சிரும்!... பொறகாலே, ஒன்னை எம்பிட்டுடமையா ஆக்கிப்புடலாம்னு ரோசிச்சிருந்தேன். ஒன் அப்பனை முந்தி மாரிதிள்ளு ஊத்தி மசக்கிறத்துக்கு ஏலாத நாலதான், இம்மாம் பெரிய தீவெனை நடத்திப்பூட்டேன்! எம் மனசிலே வெளையாடுற உன்னை அடையாம எனக்குப் பைத்தியம் புடிச்சிக்கிட்டு வந்திச்சு! ம்!... அது மனசு!... ம்!... இனிமெ, நான் ஒன் அண்ணத்தைதான்.....! தங்கச்சி, இன்னொரு வாட்டி என்னை அளை...! ம், அளை தங்கச்சி! அண்ணேன்னு அளை!

[அதிசயப் பார்வையுடன் நின்ற ராசாத்தியிடமிருந்து கண்ணீர் வெள்ளம் பெருக்கெடுத்துக் கொண்டே யிருக்கிறது.]

செங் :— ஊம், ஒன் அண்ணன் மனசு போல அளை, ராசாத்தி!

(செங்கோடன் நா தழுதழுக்கிறது:)

ராசாத்தி :— அண்ணே! அண்ணே!

[தலையை உயர்த்தி எழுந்து அமர முயல்கிறான் மாடன். கீழே உருண்டிருந்த மகுடியைஎடுத்து அதைத் தரையில் உடைக்கிறான். உடைந்த மகுடியினின்றும் தங்கத் தகட்டுச் சிதறல்கள் நாற்புறமும் தெறிக்கின்றன. நிலவு சிரித்துக்கொண்டே யிருக்கிறது.]

மாடன் :— தங்கச்சி ராசாத்தி! ஒன் அண்ணன் ஒனக்குக் கண்ணாலச் சீதனம் தரவேணுமில்ல!...இதெல்லாம் தாம்மா உனக்குச் சீதனம்...ஒனக்காகத் தயாரிச்சு வந்திருந்த இந்தத் தங்கம் அம்புட்டும் இப்ப ஒனக்கே சேர வேணுமின்கிறது வாமுனிசாமி திட்டம் போல!.. எடுத்துக்கிடு, தங்கச்சி!...கூடப்பொறக்காத ஒம்புட்டு அண்ணனை மறந்துப்புடாதே! ராசாத்தி!... செங்கோடா மச்சான், என்னை சமிசப்பூரு! நெசமாவே ஒம் மனசு தங்கம்!... சத்தியத்துக்குக் கட்டுப்பட்ட நல்லது, அந்தாலே ஒன்னைக் காத்துக் கிட்டிருக்குதே!

[நல்ல பாம்பு சீறிச் சீறி, தரையில் கொத்திக் கொத்திப் படம் எடுத்து ஆடிக் கொண்டிருக்கிறது.

ராசாத்தி:—அண்ணே!... அண்ணே!...

(தங்கத்துணுக்குகளை ராசாத்தியிடம் நீட்டி விட்டு, தளர்ந்து தள்ளாடிய வாறு நடந்து அங்கிருந்து வெளியேற முனைகிறான் மாடன். மறுகணம், தரையில் சாய்ந்து விடுகிறான்.)

மாடன் — தங்கச்சி!... தங்கச்சி!...

[குரல் அடங்கிப்போன மாடனை நெருங்க விரும்பாமல் நல்ல பாம்பு புதுமணத் தம்பதியரை சுற்றி வந்து விளையாடுகி, சிரித்த நிலவில் நீர்த்திவலை சிந்தித்துக் கொண்டிருக்கின்றன.






பெங்களூர் உல்லன், காட்டன் ,, ஸில்க் மில்ஸ் கம்பெனி லிமிடெட்
அக்ரஹாரம் ரோடு, பெங்களூர் 2
உரிமையாளர்: பின்னி & கம்பெனி (மதருஸ்) லிமிடெட்
JWT/BM-SS-1346 a